# நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். ஆதி 12 : 2

**நீ ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறாய்!**

ஆனால்

**நீ ஆசீர்வாதமாய் இருக்கிறாயா?**

100 – கிராம ஊழிய பத்திரிக்கையை வாஞ்சையுடன் வாசிக்க கையில் எடுத்திருக்கும் என் அன்பு சகோதரனே, சகோதரியே! மேற்கண்ட தலைப்பை மீண்டுமாக ஒருமுறை வாசித்துப் பாருங்கள். சற்று அமைதியாக சிந்தியுங்கள்.

ஆடுகளின் பின்னே நடந்த உன்னை, ஆட்டு மந்தையை விட்டு எடுத்து, நீ போன இடமெல்லாம் உன்னோடே இருந்து, பூமியிலிருக்கிற பெரியோர்களின் நாமத்திற்கு ஒத்த நாமத்தை உனக்கு உண்டாக்கி கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

திக்குவாயும், மந்தநாவும் உள்ள உன்னை, இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து அழைத்து வரவும், இந்த மலையில் தேவனுக்கு ஆராதனை செய்யும்படியாகவும் கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

தாய் தகப்பனில்லாமல், அடிமையாக கொண்டு வரப்பட்ட உன்னை ராஜ ஸ்திரியாக மாற்றி கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

4 நாளாய் நாறிக் கிடந்த உன்னை மரித்தோரிடத்திலிருந்து எழுப்பி கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

தரித்திரனாய் இருந்த உன்னை தம் மடியில் வைத்து கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

மீன் வயிற்றினுள்ளே சிறைபட்டுப் போன உன்னை கரையிலே பத்திரமாக கொண்டு வந்து கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

இயேசுவை அறியேன் என்று சபிக்கவும், சத்தியமும் பண்ண தொடங்கின உன்னை என் ஆடுகளை மேய்ப்பாயாக எனக் கூறி கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லை?

என் தகப்பனே என்னையும் ஆசீர்வதியும் என்று மனம் கசந்து கதறி அழுதபோது கர்த்தர் உன்னை ஆசீர்வதிக்கவில்லையா?

ஆனால் **நீ ஆசீர்வாதமாய் இருக்கிறாயா?** இது தான் கேள்வி.

அடிமையான நம்மையுமே தேவாதி தேவன் மீட்டார்
கீழ்படிந்தே அவர் சத்தம் கேட்டு சாட்சியாய் ஜீவிப்பாயா?

நம் பாதையில் காப்பாற்றியே
கர்த்தர் நடத்தினாரே
கர்த்தர் தந்த ஆசீர் யாவும் கண்டு
நன்றியாய் ஜீவிப்பாயா? – என்று பக்தன் பாடுகிறார்.

**இப்பாடலுக்கு உங்கள் பதில் என்ன?**

**1.** யோவான் எரிந்து பிரகாசிக்கிற விளக்காயிருந்தான். நீங்களும் சில காலம் அவன் வெளிச்சத்திலே களிகூற மனதாயிருந்தீர்கள். **யோ 5:35.**

இது ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து யோவானைக் குறித்து கொடுத்த சாட்சியாகும்.

இன்று நம்மைப் பார்த்து இவன் அல்லது இவள் ஒரு எரிந்து பிரகாசிக்கிற விளக்கு என்று சாட்சி கொடுக்க முடியுமா? உங்களுடைய வெளிச்சத்தில் எத்தனை பேர் களிகூர்ந்திருப்பார்கள்? நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உலகத்திலே பெரிய ஆசீர்வாதம் நாம் மற்றவர்களுக்கு ஆசீர்வாதமாக இருப்பது ஆகும்.

**2. இயேசு சொன்னார்:** "நீ குணப்பட்ட பின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து" **லூக்கா 22:32.**

என் அன்பு சகோதரனே, சகோதரியே நீ குணப்பட்டிருக்கிறாய். உன் சகோதரரை ஸ்திரப்படுத்தியிருக்கிறாயா?

**வேதம் சொல்கிறது:** மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கப்படவது. **மத்.5:16.**

உன்னிலுள்ள வெளிச்சம் இருளாகாதபடிக்கு எச்சரிக்கையாயிரு. **லூக்கா** 11:35 என்பதாக. அப்பொழுது "**நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்**"

இந்த மாதம் முழுவதும், ஆண்டவரே நான் ஆசீர்வாதமாய் இருக்கும்படி, என்னை ஆசீர்வதியும் என்று ஜெபியுங்கள். ஒருவனுக்கு **"இயேசுவை"** கொடுப்பதைக் காட்டிலும் சிறந்த அன்பு இந்த உலகில் இல்லை. இயேசுவைக் கொடுங்கள். கிறிஸ்து ஒருவரின் உள்ளத்தில் உருவாகும் வரை கர்ப்ப வேதனைப்படுங்கள்.

நன்மையே உன் வாழ்வின் தொழிலாகட்டும். அப்பொழுது

**"நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்"** ஆமென் அல்லேலூயா.